پாடம் - 9

الدرس التاسع

## அழைப்பு பணியின் புதிய கோந்திரம்

## مقر الدعوة الجديد

சத்தியத்திற்கும் சத்தியவாதிகளுக்கும் புகலிடமாகவும் பாதுகாப்புக் கேந்திரமாகவும் மதீனா ஆகிவிட்டது. மதீனாவை நோக்கி முஸ்லிம்களின் ஹிஜ்ரத் பயணம் தொடங்கியது. எனினும் குறைஷிகள் முஸ்லிம்களை ஹிஜ்ரத் செய்ய விடாமல் தடுக்க உறுதி கொண்டனர். ஹிஜ்ரத் செய்பவர்களில் சிலர் பலவகையான துன்பங்களையும் துயரங்களையும் சந்தித்தனர். முஸ்லிம்கள் குரைஷிகளுக்குப் பயந்து ரகசியமாக ஹிஜ்ரத் செய்து கொண்டிருந்தனர். அபூபக்கர்(ரலி) அவர்கள் ஹிஜ்ரத் செல்வதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அனுமதி கேட்டார்கள். அதற்கவர்கள் ‘அவசரப்படாதீர்கள்! அல்லாஹ் உங்களுக்கு ஒரு பயணத் தோழரை ஏற்படுத்தலாம்’ எனக் கூறினார்கள்.

இறுதியாக பெரும்பாலான முஸ்லிம்கள் ஹிஜ்ரத் செய்து விட்டனர். முஸ்லிம்கள் ஹிஜ்ரத் செய்து மதினாவில் ஒன்று சேர்வதை பார்த்ததும் குறைஷிகள் கொதித் தெழுந்தார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அந்தஸ்தும் அவர்களின் பிரச்சாரமும் மேலோங்கி வருவது குறித்து அஞ்சினார்கள். இது விஷயமாக அவர்கள் ஆலோசனை நடத்தி நபிகள் நாயகத்தைக் கொன்றுவிடத் தீர்மானித்தார்கள். அபூஜஹ்ல் கூறினான்: ‘எனது கருத்து என்னவெனில், நம்மிலுள்ள எல்லாக் கோத்திரத்திலிருந்தும் திடகாத்திரமான ஒரு வாலிபனைத் தேர்வு செய்து அவர்களிடம் வாளைக் கொடுக்கவேண்டும். அவர்கள் அனைவரும் முஹம்மதைச் சுற்றி வளைத்து எல்லோரும் சேர்ந்து ஒரே வெட்டாக அவரை வெட்டிவிட வேண்டும். இவ்வாறு செய்வதால் அவரின் கொலைக் குற்றம் எல்லா கோத்திரத்திலும் பிரிந்து சென்றுவிடும். அதன் பிறகு பனூஹாஷிம்களால் எல்லோரையும் பகைத்துக் கொள்ள முடியாது’ என்று கூறினான். இந்த சதித்திட்டத்தை அல்லாஹ் சங்கைக்குரிய தனது நபிக்கு தெரிவித்தான்.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் அபூபக்கருடன் ஹிஜ்ரத்துச் செய்ய முடிவு செய்தார்கள். அந்த இரவில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அலீயிடம், தம்முடைய இடத்தில் உறங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். இதன் நோக்கம் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தமது வீட்டிலேயே இருக்கிறார்கள் என மக்கள் எண்ணிக் கொள்ள வேண்டும் என்பதே. மேலும் அலீயிடம் உமக்கு எந்தத் துன்பமும் நேராது எனவும் தெரிவித்தார்கள். சதிகாரர்கள் வந்து வீட்டை முற்றுகையிட்டார்கள். படுக்கையிலிருந்த அலீயைப் பார்த்து விட்டு அவர் முஹம்மது தான் என எண்ணிக் கொண்டார்கள். அவரைத் தீர்த்துக்கட்ட வேண்டும் என்பதற்காக அவர் எப்போது வெளியே வருவார் என்பதை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் வீட்டை முற்றுகையிட்டிருக்கும் நிலையிலேயே நபிகள் நாயகம் (ஸல்) மண்ணை அள்ளி அவர்களின் தலையில் தூவிவிட்டு வீட்டை விட்டுப் புறப்பட்டுச் சென்றார்கள். அல்லாஹ் அவர்களின் பார்வையைப் பறித்து விட்டான். ஆகவே அவர்கள் நபிகள் நாயகம்(ஸல்)அவர்கள் புறப்பட்டுச் சென்றதை உணரவில்லை.

நபிகள் நாயகம்(ஸல்)அவர்கள் நேராக அபூபக்கரிடம் சென்றார்கள். பிறகு இருவரும் சேர்ந்து சுமார் ஐந்து மைல் தூரம் சென்று ஸவ்ர் எனும் குகையில் ஒளிந்து கொண்டனர். குறைஷி இளைஞர்கள் காலை வரை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். காலையில் அலீ, நபிகள் நாயகத்தின் படுக்கையிலிருந்து எழுந்ததும் குறைஷிகளிடம் பிடிபட்டார். அவரிடம் முஹம்மத் எங்கே? எனக் கேட்டார்கள். அதற்கவர் எதுவுமே கூறவில்லை. அதனால் அவர்கள் அவரை அடித்து இழுத்துச் சென்றார்கள். ஆனால் எந்தப் பலனுமில்லை. பின்னர் குறைஷிகள் எல்லா பாகங்களிலும் தேடுவதற்கு ஆள் அனுப்பினார்கள். நபிகள் நாயகத்தை உயிருடனோ பிணமாகவோ கொண்டு வருபவருக்கு நூறு ஒட்டகங்கள் பரிசாகத் தரப்படுமென அறிவித்தார்கள்.

நபிகள் நாயகம்(ஸல்)அவர்களைத் தேடிப் புறப்பட்ட எதிரிகள் நபியும் அவர்களது தோழரும் ஒளிந்திருந்த அந்த குகை வாசலுக்கே வந்துவிட்டார்கள். எந்த அளவுக்கு எனில் அவர்களில் ஒருவன் கீழே குனிந்து தன் பாதங்கள் வழியாகப் பார்த்து விட்டால் அவர்கள் இருவரையும் கண்டுகொள்வான். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஏதும் நேர்ந்துவிடுமோ என அபூபக்கர் பெரிதும் கவலை கொண்டார். அப்போது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ‘அபூபக்கரே! நாம் இருவர்தான் இருக்கிறோம் என எண்ணிக்கொண்டீரா? அல்லாஹ்வுடன் சேர்ந்து நாம் மூவரல்லவா? எனவே நீர் கவலைப்படாதீர்! நிச்சயமாக அல்லாஹ் நம்முடன் இருக்கிறான்!’ எனக் கூறினார்கள். ஆனால் அக்கூட்டத்தினர் அவ்விருவரையும் பார்க்கவில்லை. இருவரும் குகையில் மூன்று நாட்கள் தங்கியிருந்து விட்டு பிறகு மதீனாவை நோக்கி நடந்தனர். பயணம் நீண்ட பயணமாக இருந்தது. வெயில் தீயாகக் கொளுத்தியது.

இரண்டாம் நாள் மாலையில் அவ்விருவரும் ஒரு கூடாரம் அருகே சென்றனர். அதில் உம்மு மஅபத் எனச் சொல்லப்படும் ஒரு பெண்ணைக் கண்டனர். அவரிடம் உணவும் தண்ணீரும் கேட்டனர். அவரிடம் எதுவுமே இல்லை. மெலிந்த ஒரே ஒரு ஆட்டைத் தவிர! அதன் பலவீனம் அதை மேய்ச்சலுக்குச் செல்ல முடியாதவாறு தடுத்திருந்தது. அதனிடம் துளிகூடப் பால் இல்லை. நபிகள் நாயகம்(ஸல்) அதன் அருகில் சென்று அதன் பால் மடியைத் தடவி பால் கறந்து ஒரு பெரிய பாத்திரத்தை நிரப்பினார்கள். அதைப் பார்த்து விட்டு உம்மு மஃபத் திகைத்துப் போய் நின்று கொண்டிருந்தார். பிறகு அனைவரும் தாகம் தீர அருந்தினர். பிறகு இரண்டாம் முறையும் பால் கறந்து பாத்திரத்தை நிறைத்து, அதை உம்மு மஅபதிடம் கொடுத்து விட்டு நடையைத் தொடர்ந்தனர்.

மதீனாவாசிகள் ஒவ்வொரு நாளும் மதீனாவிற்கு வெளியே நின்று கொண்டு நபிகள் நாயகம்(ஸல்)அவர்கள் வந்து சேர்வதை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். நபியவர்களும் அபூபக்ரும் மதீனா சென்றடைந்த நாளன்று அவர்களை வாழ்த்துச் சொல்லி மகிழ்வோடு வரவேற்றனர். நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் மதீனாவின் மேட்டுப் பகுதியிலுள்ள குபா என்னுமிடத்தில் இறங்கினார்கள். அங்கு நான்கு நாட்கள் தங்கியிருந்தார்கள். அங்கு குபா பள்ளிவாசலை நிர்மாணித்தார்கள். இஸ்லாத்தில் முதன் முதலில் கட்டப்பட்ட பள்ளிவாசல் இதுதான்.

ஐந்தாம் நாள் மதீனாவுக்குப் புறப்பட்டார்கள். அன்ஸாரிகளில் பெரும்பாலோர் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களை அழைத்துச் சென்று அவர்களுக்கு விருந்து உபசரிப்பதன் சிறப்பைத் தாங்களே பெற முயற்சித்தார்கள். அதனால் போட்டி போட்டுக் கொண்டு அவர்களுடைய ஒட்டகத்தின் கடிவாளத்தைப் பிடித்தார்கள். அப்போது நபிகள் நாயகம்(ஸல்)அவர்கள் அவர்களுக்கு நன்றி கூறி ‘ஒட்டகத்தைவிட்டு விடுங்கள்! நிச்சயமாக அது இறைவனால் ஆணையிடப்பட்டுள்ளது’ எனக் கூறினார்கள். அல்லாஹ் ஏவிய இடத்தை அடைந்ததும் அந்த ஒட்டகம் படுத்துக் கொண்டது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதிலிருந்து இறங்கவில்லை. உடனே அது எழுந்து சிறிதுதூரம் நடந்தது. பிறகு திரும்பி வந்து மீண்டும் அதன் முதல் இடத்திலேயே படுத்துக் கொண்டது. அதன் பிறகு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதிலிருந்து இறங்கினார்கள். அது தான் மஸ்ஜிதுன் நபவி- நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கட்டிய பள்ளிவாசல் உள்ள இடமாகும். நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் அபுஅய்யூப் அல்-அன்சாரி வீட்டில் தங்கினார்கள். அலீ (ரலி) அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பின் மூன்று நாட்கள் மக்காவில் தங்கிவிட்டு பிறகு மதீனா புறப்பட்டார்கள். குபாவில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் வந்து சேர்ந்து கொண்டார்கள்.